மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ஆம் நாள் புதன்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி. தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 52/2017 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | |
|---|---|
| பெயர் .. ஜெயராமன் | வயது ..52 |
| த/பெ .. சின்னப்பன் | சாதி .. |
| கிராமம் ..கருங்காலிகுப்பம் | சமயம் .. |
| தாலுக்கா .. | தொழில் .. |

**வா.சா. 1 ( குறுக்கு விசாரணை )**

1. தாவா சொத்தின் வடக்கு பக்கம் பிரதிவாதியின் காலிமனை உள்ளது. நான் தாவா சொத்தை 2013ல் கருப்பன், கந்தன், ஏழுமலை, வளர் மற்றும் உமா ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் தாவா சொத்தை காலிமனையாகதான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அளந்து பார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் அளப்பதற்கு படி கட்டினேன். மேற்படி அளப்பதற்கான படி ரசீது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

2. மணிலிங்கம் அவர்கள் நான் அந்ததாவா தாக்கல் செய்வதற்கு முன்னர் இந்நீதிமன்றத்தில் **அசல் வழக்கு 25/2017 தாக்கல் செய்து ஐ.ஏ. 120/2017 என்ற** மனு இடைக்கால தடை பெற்றார் என்றால் சரிதான். பிரதிவாதி அவர் இடத்தில் நான் வீடு கட்டுகிறேன் என்று என் மீது களம்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் நான் அவரிடததில் கட்டவில்லை என்னிடத்தில் தான் வீடு கட்டுகிறேன் என்று எழுதிகொடுத்து வந்தேன்.

3. அதன் பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் என்றைக்கும் பிரதிவாதி தகராறு பன்னதில்லை என்றால் சரிதான். இந்த தாவாவை பிரதிவாதி மேற்கூறிய அசல் வழக்கு 25/2017 தாக்கல் செய்ததால் நான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்து பிரதிவாதியின் மனையும் காலிநிலமாகத்தான் இருந்தது ஏ்னறால் சரிதான்.

4. பிரதிவாதி நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்பு பிரதிவாதி என்நிலத்தில் கட்டிடம் கட்ட கூடாது என்று தகராறு செய்தார். மேற்படி பிரச்சனை தவிர எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வேறு எந்த தகராறும் இல்லை. பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டு தகராறு செய்தாரா என்றால் தகராறு செய்தார், காவல் நிலையத்தில் வைத்து 5, 6 நபர்களை அழைத்து வந்து தகராறு செயதார்.

5. தாவா தாக்கல் செய்து பிறகு ஒரு வாரம் , பத்து நாட்களிலே காவல் நிலையத்தில் பணம் கேட்டு புகார் அளித்தார் என்றால் சரிதான். இந்த தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் இருநதது இல்லை. நான் தாவா சொத்தை காலிமனையாக பெறுவதற்கு முன்பு சுமார் 2, 3 மாதங்களுக்கு முன்பு வீடாக இருந்தது அதை இடித்துதான் எனக்கு காலிமனையாக கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்திற்கு அருகில் 40 வருடங்களாக பிரதிவாதியிடம் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

6. நான் கிரையம் பெற்ற காலிமனை அளவில் தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் கட்டியுள்ள வீட்டின் பின்புறம் உள்ள கழிவறை அளவு என்னவென்றால் **4அடிக்கு 4அடி** ஆகும். மேற்படி 4அடி இடத்தில் தான் நான் பிரதிவாதி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற கிரைய தாராருக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது அவர்களின் பூர்விக சொத்து ஆகும்.

7. மேற்படி கிரையதாரரின் பூர்விக சொத்து என்பதற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்றால் உள்ளது. மேற்படி மூலபத்திரத்தை அடிப்படையாக வைத்து தான் நான் வா.சா.ஆ1 நான் நிறைவேற்றினேன் என்றால் சரிதான். நான் கூறுவது போல் மூலபத்திரம் எதுவும் இல்லை நான் தோராயாமாக வா.சா.ஆ.1ல் அளவீடுகளை காண்பித்து உள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலே நான் மூலபத்திரம் இருந்தால் நான் தாக்கல் செய்துஇருப்பேன் என்றால் சரியல்ல. மூலபத்திரம் என்னிடம் தற்போது இல்லை.

8. என் கியைதாரரின் மூலபத்திரத்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதி சொத்தும் காலிமனை என்பதால் நான் தவறாக பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கழிவறை கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து முறையாக அளவீடு செய்து மேற்படி நான் கட்டியுள்ள கழிவறை பிரதிவாதி இடத்தில் இருந்தால் நான் மேற்படி கழிவறை இடித்து கொடுத்துவிடுகிறேன் என்றால் கொடுத்துவிடுகிறேன்.

9. பிரதிவாதி மனு தாக்கல் செய்து ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அளவீடு செய்ய நில அளவையர் வந்தார் ஆனால் நான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தால் அவர்களை திருப்பி அனுப்பிவிட்டேன். நான் பெற்ற பட்டா ( வா.சா.ஆ2 ) என்னுடைய கிரையப்பத்திரம் ( வா.சா.ஆ1 ) அடிப்படையில் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 வீட்டு வரி ரசீது 2016 முதல் 2017 வரை உண்டான காலகட்டத்திற்கானது ஆனால் நான் 2017ல் தான் வீடு கட்டியதாக கூறியுள்ளேன் என்றால் வீடு கட்டுவதற்காக நான் ரசீது முன்பே பெற்றுவிட்டேன் வீடு கட்டுவதற்கு முன்பே ரசீது பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

10. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பிரதிவாதியின் நிலத்தை ஆபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானாக தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி என் மீது வழக்கு தாக்கல் செய்து இடைக்கால தடைபெற்றும், காவல் நிலையத்தில் புகார் அளித்தும் இருந்ததால் நான் வழக்கு மூலம் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல்செய்யயததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு எந்த முகாந்திரம் இல்லாமல் தர்க்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

*Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.*

*Sdl/-B.Salma.*

*District Munsif,*

*Polur.*